FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | இலங்கை வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

❖ ***1 - 5* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) (1) எலகர (2) பப்பதந்த (3) ஆகாச கங்கை
(4) ஜயகங்கை (5) வளவைகங்கை (.......)

02) (1) எல்லாளன் (2) தாடிகன் (3) குட்டபாரிந்த
(4) சந்திரபானு (5) குடக்கண்ண அபயன் (.......)

03) (1) இத்திய (2) உத்தல (3) சம்பல
(4) பத்தசால (5) மகாநாம (.......)

04) (1) சிலப்பதிகாரம் (2) மணிமேகலை (3) பதிற்றுப்பத்து
(4) பட்டினப்பாலை (5) யாழ்ப்பாண வைபவமாலை (.......)

05) (1) மின்னேரியாகுளம் (2) கந்தளாய்க்குளம் (3) குருளுவாவி
(4) மகாகணதரவாவி (5) மாமினியவாவி (.......)

❖ ***6 - 10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாதுள்ளது. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

06) (1) மகாவலிகங்கை - திருகோணமலை
(2) வளவகங்கை - அம்பாந்தோட்டை
(3) மாணிக்ககங்கை - கிரிந்த
(4) நில்வள கங்கை - காலி
(5) தெதுறுஓயா - சிலாபம் (.......)

07) (1) பண்டுகாபயன் - சுவர்ணபாலி
(2) கல்லாடநாகன் - அனுலாதேவி
(3) நிஸங்கமல்ல - சுகலாதேவி
(4) வட்டகாமினி - சோமாதேவி
(5) மகாதாடிக மகாநாகன் - தமிலாதேவி (.......)

08) (1) புதுசரண - குருளுகோமி
(2) சத்தர்மரத்னாவலிய - தர்மசேன தேரர்
(3) யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்
(4) ரஜவாகினி - வேதேக தேரர்
(5) பரவிசந்தேசய - ஸ்ரீராகுல தேரர் (.......)

09) (1) தூபராம - தேவநம்பியதீஸன்
(2) அபயகிரி - வட்டகாமினி
(3) ஜேதவன - மகாசேனன்
(4) கடலாதெனியா - 6ம் பராக்கிரமபாகு
(5) ரன்கொத் - நிஸங்கமல்லன் (.......)

10) (1) முன்னேஸ்வரம் - சிலாபம்
(2) திருக்கோவில் - திருகோணமலை
(3) கந்தசுவாமி கோவில் - நல்லூர்
(4) உபுல்வன் தேவாலே - தெவிநுவர
(5) நாத தேவாலே - கண்டி (.......)

❖ **11 - 15 வரை X, Y நிரல்களில் தரப்பட்டுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11)

| X | Y |
|---|---|
| (1) முதலாம் பராக்கிரமபாகு | A - குருநாகல் |
| (2) இரண்டாம் பராக்கிரமபாகு | B - கம்பளை |
| (3) நான்காம் பராக்கிரமபாகு | C - கோட்டை |
| (4) ஐந்தாம் பராக்கிரமபாகு | D - பொலனறுவை |
| (5) ஆறாம் பராக்கிரமபாகு | E - தம்பதெனியா |

(1) EABCD (2) CBDEA (3) DEABC (4) ECABD (5) DBAEC (.......)

12)

| X | Y |
|---|---|
| (1) சமந்தபாசாதிகா | A - தம்பதெனியாக் காலம் |
| (2) ஸஸ்தாவத | B - பொலனறுவைக் காலம் |
| (3) சிதத்சங்கரா | C - கண்டி மன்னர் காலம் |
| (4) மயூர சந்தேஸ | D - அனுராதபுர காலம் |
| (5) மந்தாரம்புர புவத | E - கம்பளைக் காலம் |

(1) DABCE (2) DBAEC (3) BAEDC (4) DBCEA (5) ECABD (.......)

13)

| X | Y |
|---|---|
| (1) சிறிமேக வண்ணன் | A - கெப்பிற்றிகமுதூண் கல்வெட்டு |
| (2) நான்காம் உதயன் | B - தேவநகலபாறைக் கல்வெட்டு |
| (3) முதலாம் விஜயபாகு | C - கல்பொத்த சாசனம் |
| (4) முதலாம் பராக்கிரமபாகு | D - பனாகடுவ செப்பேடு |
| (5) நிஸ்ஸங்கமல்லன் | E - தோணிகல் கல்வெட்டு |

(1) DBACE (2) EDABC (3) BDECA (4) BADCE (5) EADBC (.......)

14)

| X | Y |
|---|---|
| (1) றொபேட் நொக்ஸ் | A - இலங்கையில் உள்ள புராதன நீர்த்தேக்கங்கள் |
| (2) ∴போப்ஸ் | B - இலங்கையின் ஒரு வரலாற்றுத் தொடர் |
| (3) எமேசன் ரெனனற் | C - இலங்கையில் ஐம்பது வருடங்கள் |
| (4) தொமஸ் ஸ்கின்னர் | D - இலங்கை |
| (5) R.L. புறோஹியர் | E - இலங்கையில் பதினொரு வருடங்கள் |

(1) BEDCA (2) EBDCA (3) BADEC (4) CADEB (5) DBCEA (.......)

15) X Y

| X | Y |
|---|---|
| (1) அல்போன்ஸ் பெரேரா | A - பலன |
| (2) லேபஸ் சூசா | B - தந்துரே |
| (3) அசவிடோ | C - கன்னொருவ |
| (4) கொன்ஸ்தாந்தி சூஸா | D - முல்லேரியா |
| (5) தியாகுதமெல்லோ | E - ரந்தெனிவெல |

(1) DBACE (2) DBAEC (3) ECDBA (4) ACDBE (5) ADCBE (.......)

❖ **16 - 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) மேல்வரும் பட்டியல்களுள் எது இலங்கை மீது படையெடுத்த தென்னிந்திய படையெடுப்பாளர்களை காலக்கிரம வரிசையில் சரியாகக் குறிப்பிடுவது?
(1) சேனனும் குத்திகனும், எல்லாளன், ஐந்து தமிழர், முதலாம் இராஜஇராஜன்
(2) சேனனும் குத்திகனும், எல்லாளன், ஏழு தமிழர், ஐந்து தமிழர், முதலாம் இராஜஇராஜன்
(3) எல்லாளன், சேனனும் குத்திகனும், ஐந்து தமிழர், ஏழு தமிழர், முதலாம் இராஜஇராஜன்
(4) எல்லாளன், சேனனும் குத்திகனும், முதலாம் இராஜஇராஜன், ஐந்து தமிழர், ஏழு தமிழர்
(5) சேனனும் குத்திகனும், எல்லாளன், முதலாம் இராஜஇராஜன், ஐந்து தமிழர், ஏழு தமிழர்
(.......)

17) அனுராதபுர காலத்து இலங்கை மன்னர்களை காலக்கிரம வரிசையில் காட்டும் சரியான விடைத் தொகுதி
(1) சத்தாதிஸ்ஸ, லஞ்சதிஸ, தூலத்தன, கல்லாடநாக, வலகம்பா
(2) வலகம்பா, சத்தாதிஸ்ஸ, தூலத்தன, கல்லாடநாக, லஞ்சதிஸ
(3) சத்தாதிஸ்ஸ, தூலத்தன, லஞ்சதிஸ, கல்லாடநாக, வலகம்பா
(4) லஞ்சதிஸ, தூலத்தன, சத்தாதிஸ்ஸ, லஞ்சதிஸ, கல்லாடநாக
(5) வலகம்பா, சத்தாதிஸ்ஸ, தூலத்தன, லஞ்சதிஸ, கல்லாடநாக

18) தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர் எழுதிய ஆக்கங்களுள் அடங்காதது எது?
(1) காவியசேகர (2) பரவிசந்தேச (3) சலலகினிசந்தேசய
(4) பஞ்சிகாபிரதீப (5) புதுகுண அலங்காரய (.......)

19) சீதாவாக்கை இராச்சியத்தின் முதல் மன்னன்
(1) மாயாதுன்னை (2) டிக்கிரி பண்டார (3) 7ம் புவனேகபாகு
(4) 1ம் விமலதர்மசூரியன் (5) மத்துமபண்டார (.......)

20) உருகுணை இராச்சிய அரசர்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதி எது?
(1) தேவநம்பியதீஸன், மகாநாகன், கோதாபயன், காவன்தீஸன்
(2) மகாநாகன், வட்டகாமினி, மித்தசேனன், காவன்தீஸன்
(3) கல்லாடநாகன், காவன்தீஸன், கோதாபயன், மகாநாகன்
(4) மகாநாகன், யட்டலதீஸன், கோதாபயன், காவன்தீஸன்
(5) மகாநாகன், மகாசேனன், கோதாபயன், காவன்தீஸன் (.......)

❖ **21 - 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் வரும் தலைப்பின் கீழ் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. தலைப்புடன் பொருந்தாத கூற்றின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) இலங்கையில் பௌத்தம் கொண்டு வரப்பட்டமை
(1) மூன்றாம் பௌத்த மாநாடு
(2) மகிந்ததேரர் இலங்கை வந்தமை
(3) தேரி சங்கமித்தை வருகை
(4) மகாமேகவனம் சங்கத்தாருக்கு வழங்கப்பட்டமை
(5) உபராஜ மகாநாகனைச் சங்கத்திற் சேர்த்தமை

22) முதலாம் பராக்கிரமபாகுவின் சமய நடவடிக்கைகள்
(1) வட்டதாகை நிர்மாணித்தமை
(2) மூன்று நிக்காயாக்களையும் இணைத்தமை
(3) கல்விகாரை கதிகாவத என்பதை நிறுவியமை
(4) அம்பகமுவ கிராமத்தை ஸ்ரீபாதாவிற்கு வழங்கியமை
(5) ஆலாகண பிரிவெனாவை நிர்மாணித்தமை

23) கண்டி இராச்சியம்
(1) சேனாசம்மவிக்கிரமபாகு முதல் மன்னன்.
(2) போர்த்துக்கேயர் டொனா கதரீனாவை யமசிங்க பண்டாரனுக்கு திருமணம் செய்து வைத்த பின்னர் அவளை கண்டியில் அரச பதவி பெற செய்தான்.
(3) 1594 இல் போர்த்துக்கேயரை தோற்கடித்து 1ம் விமலதர்மசூரியன் ஆட்சிக்கு வந்தான்.
(4) 2ம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை ஒல்லாந்தர் உதவியுடன் துரத்தினான்.
(5) கண்டி சிங்கள மன்னர் வரிசையில் ஸ்ரீ பராக்கிரம நரேந்திரசிங்கன் இறுதி அரசனாவான். (.......)

24) கம்பளை இராச்சியம்
(1) இக்காலத்தில் கோகில சந்தேசிய எழுதப்பட்டது.
(2) சேனாதிலங்காதிகாரிகள், அழகக்கோனார் இக்காலத்தில் மிகுந்த அதிகாரம் கொண்ட வம்சங்கள்
(3) கம்பளையின் சில பகுதிகள் மீது ஆரியச்சக்கரவர்த்திகள் படையெடுத்துள்ளனர்.
(4) மதவல, லங்காதிலக ஆகிய இடங்களில் உள்ள சாசனங்கள் இக்காலத்திற்குரியவை
(5) கடலாதெனியாவிலுள்ள சத்தர்மதிலக விகாரை கணேஸ்வராச்சாரியாரினால் நிர்மாணிக்கப் பட்டது. (.......)

25) ஒல்லாந்தரும் கண்டியும்
(1) ஒல்லாந்தர் முதலாம் விமலதர்மசூரியனை 1602 இல் சந்தித்தனர்.
(2) கண்டிமீதான ஒல்லாந்தர் படையெடுப்பும் 1766 ம் ஆண்டு உடன்படிக்கையும்
(3) ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றியமை
(4) 1638 உடன்படிக்கை
(5) உபசம்பதாவை நடத்த சீயத்திலிருந்து பிக்குகளை வரவழைக்க கண்டி மன்னனுக்கு ஒல்லாந்தர் உதவினர். (.......)

❖ **26 - 30 வரை A, B, C, D என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியானவை. அதன் படி**

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் 1 எனவும்

(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் 2 எனவும்

(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் 3 எனவும்

(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் 4 எனவும்

ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் எழுதுக.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற் பட்ட விடைகள் சரி |

26) வலகம்பாவின் ஆட்சி தொடர்பானது / வை
A) இளவரசியான ஹேமலதா புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்தார்.
B) ஏழு தமிழ்ப் பிரதானிகள் இலங்கை மீது படையெடுத்தனர்.
C) திரிபிடகம் எழுதப்பட்டது.
D) மோரியருக்கும் லம்பகர்ணருக்கும் இடையில் தகராறு ஆரம்பித்தது. (.......)

27) முதலாம் விஜயபாகுவின் சாதனைகள் தொடர்பாக மேல்வரும் கூற்றுக்களில் எது? / எவை? சரியானது / சரியானவை

A) இலங்கையை ஒன்றிணைத்தமை
B) உபசம்பதா மூலம் சங்கத்தை புனர்நிர்மாணித்தமை
C) கலிங்கமாகனை தோற்கடித்தமை
D) திபெத் நாட்டுடன் சமய உறவுகளை தொடர்ந்து பேணியமை (.......)

28) சீதாவக்கை இராச்சியத்தின் வீழ்ச்சி தொடர்பான கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை?

A) முதலாம் இராஜசிங்கனது சாதனைகளை உறுதிப்படுத்த வாரிசு இன்மை
B) முதலாம் இராஜசிங்கன் சைவனாக சமயம் மாறியமை
C) சீதாவாக்கை இராச்சியத்தின் பிரதேசங்களை போர்த்துக்கேயர் கைப்பற்றியமை
D) முதலாம் விமலதர்மசூரியனின் எழுச்சி (.......)

29) யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை?

A) யாழ்ப்பாண வைபவமாலை பிரதான ஆதாரம்.
B) விஜயகூழங்கை முதல் அரசனாக கொள்ளப்படுகிறான்.
C) யாழ்ப்பாணத்தின் முதலரசர்கள் சோழப் பேரரசின் மண்டலாதிபர்கள் ஆவர்.
D) 1617 இல் பரராஜசேகரனை கொன்று போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். (.......)

30) 16ம் நூற்றாண்டின் கோட்டை இராச்சியம் பற்றிய கூற்றுக்களில் சரியானது எது? / எவை?

A) 1521 இல் விஜயபாகு கொலையின் விளைவாக கோட்டை இராச்சியம் பிளவுபட்டது.
B) றைகம பண்டார இறந்தவுடன் றைகம பகுதி 7ம் புவனேகபாகுவால் கோட்டையுடன் இணைக்கப்பட்டது.
C) போர்த்துக்கேயர் 1565 இல் தர்மபாலனை கொழும்பிற்கு அழைத்துச் சென்ற பின் கோட்டை இராசதானி என்ற நிலையை இழந்தது.
D) 7ம் புவனேகபாகு கத்தோலிக்க சமயத்தை தழுவிய முதலாவது கோட்டை மன்னனாவார்.

❖ **31 - 35 வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) புத்தகோசர் எவருடைய காலத்தில் இலங்கை வந்தார்?
(1) மகாநாகன் (2) புத்ததாஸ (3) 1ம் உபதிஸ்ஸ
(4) கீர்த்தி ஸ்ரீமேவன் (5) முதலாம் அக்கோபோதி (.......)

32) ஹேமமாலா இளவரசி வந்திறங்கிய பண்டைய துறைமுகம்
(1) மகாதித்த (2) கோகண்ண (3) ஊராத்தோட்ட
(4) லங்காபட்டுண (5) ஜம்புகோளம் (.......)

33) கவிசிலுமின என்ற நூலின் ஆசிரியர்
(1) வேதேஹதேரர் (2) அநோமதஸி (3) 2ம் பராக்கிரமபாகு
(4) தர்மசேனதேரர் (5) புத்தபுத்திரதேரர் (.......)

34) முதலாம் விஜயபாகுவின் மனைவியான லீலாவதியின் தந்தை
(1) மகத பிம்பிசாரன் (2) அயோத்தி ஜகதிபாலன்
(3) கலிங்கமாகன் (4) பாண்டிய வீரவர்மன்
(5) சோழ இராஜராஜன் (.......)

35) கண்டி இராச்சியத்தில் வெடிக்கார லேகம் என்ற அலுவலரின் பணி

(1) யானை அதிகாரி
(2) பிரதம மந்திரி
(3) தூதுவன்
(4) திறைசேரிப்பொறுப்பு
(5) காலாற்படை தலைவர் (.......)

❖ **36 - 40 வரை இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூற்று தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்கு கீழே உள்ள அட்டவணைப்படி சரியான விடையின் இலக்கத்தை எழுதுக.**

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| சரியானது | பிழையானது |
| சரியானது | சரியானது |
| பிழையானது | பிழையானது |
| பிழையானது | சரியானது |
| சரியானது | சரியானதும் முதலாம் கூற்றை நன்றாக விளக்குவதும் |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36) இலங்கை வரலாற்றினை அறிய மகாவம்சம் பெரிதும் துணை செய்கிறது. | தீபவம்சம் மகாயான பௌத்த கோட்பாட்டை தழுவி எழுதப்பட்டது. (.........) |
| 37) அனுராதபுரத்தை பண்டுகாபயன் தனது தலைநகரமாக அமைத்தான் | பசவக் குளத்தை பண்டுகாபயன் கட்டினான். (.........) |
| 38) தெதிகம கோட்டை விகாரையை நிஸ்ஸ ங்கமல்ல மன்னன் கட்டினான் | நிஸ்ஸங்கமல்லன் அருமண தேசத்திற்கு படையெடுத்தான். (.........) |
| 39) இலங்கையை ஒன்றிணைக்க துட்டகாமி னியின் போருக்கு காவந்தீசன் வழி அமைத்தான். | காவந்தீஸன் படையொன்றை திரட்டி அதற்கு பயிற்சியளித்ததோடு ஆயுத உற்பத்தியை பெருக்கி மகாவலி ஆற்றங்கரையில் கேந்திர நிலையங்களை அமைத்திருந்தான். (.........) |
| 40) போர்த்துக்கேயர் புரட்டஸ்தாந்து சமய த்தை பரப்பினர். | இலங்கையில் இருந்து போர்த்துக்கேயரை அகற்றுவதற்கு 1638 இல் 2ம் இராஜசிங்கன் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்தான். (.........) |

## பகுதி - II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

01) தரப்பட்ட இலங்கைப் புற உருவப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிட்டு விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்புரை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| (i) | நல்லூர் | (v) | கலாவாவி |
| (ii) | கொழும்பு | (vi) | சிகிரியா |
| (iii) | மல்வத்துஓயா | (vii) | மாத்தறை |
| (iv) | தீகவாவி | (viii) | செங்கடகல |

($8 + 5 \times 2 = 18$ புள்ளிகள்)

02) மகாசேனன் ஆட்சிக்காலம் வரையான இலங்கை வரலாற்றை கற்பதில் மகாவம்சம் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

03) மேல்வரும் தலைப்புக்களில் தேவநம்பியதீசனுடைய ஆட்சிக் காலத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்க.

(i) பௌத்த சமயம் அறிமுகமாதல்

(ii) பண்பாட்டு வளர்ச்சி

(iii) முடியாட்சி வலுப்பெறல் *(14 புள்ளிகள்)*

04) முதன்முதல் நாடுமுழுவதையும் ஒன்றிணைத்த ஆட்சியை துட்டகாமினி ஏற்படுத்தினான்.

(i) துட்டகாமினியின் பெற்றோர் பெயர்களை குறிப்பிடுக. *(2 புள்ளி)*

(ii) துட்டகாமினியின் தந்தையின் ஆட்சிப் பிரதேசம் எது? *(1 புள்ளி)*

(iii) துட்டகாமினியின் தந்தையினது அரசியல் சாதனைகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. *(4 புள்ளி)*

(iv) துட்டகாமினி நாட்டை ஒன்றிணைத்த விதத்தை பரிசீலனை செய்க. *(7 புள்ளி)*

05) பொலனறுவைக்கால கலை, கட்டடக்கலை என்பவற்றின் பிரதான அம்சங்களை நுணுக்கமாக பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

06) “இலங்கை வரலாற்றில் சிறப்பு பெற்ற மன்னர்களில் இரண்டாம் பராக்கிரமபாகுவும் ஒருவனாவான்”

(i) 2ம் பராக்கிரமபாகுவிற்கு முன் ஆட்சி புரிந்த அரசன் யார்? *(1 புள்ளி)*

(ii) 2ம் பராக்கிரமபாகு எதிர்நோக்கிய இரண்டு சவால்களைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

(iii) 2ம் பராக்கிரமபாகு பௌத்த சமயத்திற்கு ஆற்றிய ஆதரவினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக *(4 புள்ளி)*

(iv) 2ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் முக்கியமானதாக கொள்ளப்படுவதற்குரிய காரணங்களை ஆராய்க. *(7 புள்ளி)*

07) கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவான காரணங்களை பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

08) மேல்வருவன தொடர்பாக கண்டி இராச்சியத்தின் நிர்வாக முறையைப் பரிசீலனை செய்க.

(i) மத்திய அரசாங்கம்

(ii) பிராந்திய ஆட்சி *(14 புள்ளிகள்)*


09) மேல்வருவனவற்றில் விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்புரை எழுதுக.

(i) கோட்டைக்கால கல்வி

(ii) சீதாவாக்கை இராச்சியம்

(iii) 2ம் இராஜசிங்கன்

(iv) யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரை ($7 \times 2 = 14$ புள்ளிகள்)


N
மாகாண எல்லை